# பொதுத் துறை

மானியக் கோரிக்கை எண். 38

## அறிவிப்புகள்
## 2019–2020

**எடப்பாடி கே. பழனிசாமி**

முதலமைச்சர்

**தமிழ்நாடு அரசு**
**2019**

## 1. மும்பையில் ஒரு புதிய “தமிழ்நாடு இல்லம்” அமைக்கப்படும்

அரசு அலுவல் ரீதியாக புதுதில்லிக்கு செல்லும் மக்கள் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் தங்குவதற்கு ஏதுவாக புதுதில்லியில் தமிழ்நாடு இல்லம் இயங்கி வருகிறது.

இதே போன்று மும்பையிலும் “தமிழ்நாடு இல்லம்” தொடங்க பல்வேறு தரப்பிலும் பெறப்பட்ட கோரிக்கையினை ஏற்று, மும்பை செல்லும் மக்கள் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் தங்குவதற்கு ஏதுவாகவும், தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி மேம்பட, மும்பையில் உள்ள பல்வேறு நிறுவனங்களிடம் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும், தமிழ்நாட்டின் சுற்றுலா மற்றும் கலாச்சார வளர்ச்சியை மேலும் ஊக்குவிக்கும் விதமாக, **மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன்,** மகாராஷ்டிரா மாநிலம், மும்பை நகரத்தில் புதிதாக “தமிழ்நாடு இல்லம் மற்றும் தமிழ்நாடு கலாச்சார மையம்” ஒன்றும் அமைக்கப்படும்.

## 2. சென்னை அரசு விருந்தினர் மாளிகையில் புதிய "உடற்பயிற்சிக் கூடம்" அமைக்கப்படும்.

பல்வேறு மாநிலங்களிலிருந்து சென்னைக்கு வருகை புரியும் அரசு விருந்தினர்கள், மக்கள் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் ஆகியோர் தங்குவதற்கு ஏதுவாக, சென்னை சேப்பாக்கத்தில் அரசு விருந்தினர் இல்லம் இயங்கி வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், இங்கு தங்கும் விருந்தினர்களின் பயன்பாட்டிற்காக புதிதாக ரூ. 10 இலட்சம் செலவில் "உடற்பயிற்சிக் கூடம்" ஒன்று அமைக்கப்படும்.

**3. மதுரை மாவட்டத்தில் ரூ.88.00 இலட்சம் செலவில் முன்னாள் படைவீரர்கள் நல அலுவலகத்துடன் கூடிய புதிய முன்னாள் படைவீரர் மையக் கட்டடம் கட்டப்படும்.**

**மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன்,** மதுரை மாவட்டத்தில் முன்னாள் படைவீரர்கள் நலத்துறைக்கு சொந்தமான நிலத்தில், முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களின் பயன்பாட்டிற்காக, முன்னாள் படைவீரர்கள் நல அலுவலகத்துடன் கூடிய புதிய முன்னாள் படைவீரர்கள் மையக் கட்டடம் ரூ. **88.00** இலட்சம் செலவில் கட்டப்படும்.

**4. முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்த 5,542 பேருக்கு வழங்கப்பட்டு வரும் மாதாந்திர நிதியுதவிகள் ரூ.7.69 கோடி கூடுதல் செலவினத்தில் உயர்த்தி வழங்கப்படும்.**

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கு வழங்கப்படும் கீழ்க்காணும் மாதாந்திர நிதியுதவிகள் உயர்த்தி வழங்கப்படும்.

| வ. எண். | நிதியுதவியின் பெயர் | தற்போது வழங்கப்படும் தொகை (ரூ) | உயர்த்தி வழங்கப்படும் தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1 | இரண்டாம் உலகப்போர் நிதியுதவி (முன்னாள் படைவீரர்கள்) | 6000/– | 10,000/– |
| 2 | இரண்டாம் உலகப்போர் நிதியுதவி (கைம்பெண்கள்) | 3000/– | 4000/– |
| 3 | முதியோர் உதவித்தொகை | 2500/– | 3000/– |
| 4 | மருத்துவ நிதியுதவிகள் புற்றுநோய், கண் பார்வையற்றோர், தொழுநோய் மற்றும் மன வளர்ச்சி குன்றிய சிறார்கள் நிதியுதவி | 3000/– | 5,000/– |
| 5 | மாற்றுத் திறனாளிகளுக்கான நிதியுதவி மற்றும் பிற நோய்களுக்கான நிதியுதவி | 2500/– | 5,000/– |

**5. முன்னாள் படைவீரர்களின் / கைம்பெண்களின் ஒரு மகளுக்கு வழங்கப்பட்டு வரும் திருமண நிதியுதவி ரூ. 20 ஆயிரத்திலிருந்து ரூ.25 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும் மற்றும் இரண்டாவது மகளுக்கு இந்நிதியுதவி நீட்டிப்பு செய்து வழங்கப்படும்.**

**மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன்,** முன்னாள் படைவீரர் / கைம்பெண்ணின் ஒரு மகளுக்கு வழங்கப்பட்டு வரும் திருமண நிதியுதவி ரூ.20,000/–லிருந்து ரூ.25,000/–ஆக உயர்த்தி வழங்கப்படும். மேலும் இந்நிதியுதவி முன்னாள் படைவீரரின் / கைம்பெண்ணின் இரண்டாவது மகளுக்கும் நீட்டிப்பு செய்து வழங்கப்படும்.

## 6. வேலைவாய்ப்பு, படிப்பு மற்றும் பிற காரணங்களுக்காக அயல்நாடு செல்லும் தமிழர்களுக்கு பயிற்சி வழங்கப்படும்.

தமிழ்நாட்டிலிருந்து வேலை வாய்ப்பு, படிப்பு மற்றும் பிற காரணங்களுக்காக தமிழர்கள், வெளிநாடுகளுக்கு செல்லும் முன்னர் அவர்தம் கடமைகள், உரிமைகள் குறித்து கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு / சட்ட நடைமுறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு, **மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், 50** பயிற்றுனர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, இப்பயிற்றுனர்கள் மூலம் மாவட்டந்தோறும் மாதம் ஒருமுறை, மாணவர்கள் தொழிற்கல்வி பயிலும் கல்வி நிலையங்கள் (ஐ.டி.ஐ. மற்றும் பாலிடெக்னிக்) மற்றும் வேலைவாய்ப்பு மையங்களில் பயிற்சி அளித்திட, மாவட்டங்களில் உருவாக்கப்பட்டுள்ள "மாவட்ட நல மையம் (வெளி நாடு வாழ் தமிழர்கள்)" மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இப்பயிற்சியானது, வெளிசெல் அனுமதி (ECR) பெற்று, வெளிநாடுகளுக்கு வேலை மற்றும் படிப்பு உள்ளிட்ட காரணங்களுக்காகச் செல்லும் தமிழர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

**7. பின்தங்கிய நிலையில் உள்ள தாயகம் திரும்பியோர் (Repatriates) பயன் பெறும் வகையில் 'அனைவருக்கும் வீடு' (Housing for All) திட்டத்தின் கீழ் 500 வீடுகள் நகர்ப்புற பகுதிகளில் ஒதுக்கீடு செய்யப்படும்.**

தமிழ்நாட்டில், பல்வேறு மாவட்டங்களில் வசித்து வரும் தாயகம் திரும்பியவர்கள் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழ்ந்து வருகின்றனர். பின்தங்கிய நிலையில் வசிக்கும் தாயகம் திரும்பிய மக்கள் பயன்பெறும் வகையில் **மாண்புமிகு அம்மா அவர்களின்** நல்லாசியுடன், **'அனைவருக்கும் வீடு' (Housing for All)** என்னும் திட்டத்தின் கீழ், **2019 – 2020** ஆம் நிதியாண்டில் **500** வீடுகள் நகர்ப்புற பகுதிகளில் ஒதுக்கீடு செய்யப்படும்.

**எடப்பாடி கே. பழனிசாமி**

முதலமைச்சர்